உளி- 1| ஓசை-68 | டிசம்பர்-2022| திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

அரசு பதிவெண்: 521/2018

நிறுவனர் & ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

அட்டைப்படம் :
படைப்பு டிசைன் டீம்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607002

படைப்பு பிரைவேட் லிமிட்டட்,
#12/6, மூன்றாம் தளம்,
வெல்வோர்த் ப்ராபர்ட்டீஸ்,
7 வது தெரு , டாக்டர் சுப்பாராயன் நகர்,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
admin@padaippu.com
91 7338897788 / 7338847788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | | |
|---|---|---|
| தி.கலையரசி | - | 4 |
| மா. காளிதாஸ் | - | 5 |
| க. அய்யப்பன் | - | 6 |
| ஐ. தர்மசிங் | - | 6 |
| நெல்சன் வாசுதேவன் | - | 7 |
| அன்பு மணிவேல் | - | 8 |
| வினோதன் | - | 9 |
| கா.ரஹ்மத்துல்லாஹ் | - | 10 |
| பிரியா பாஸ்கரன் | - | 11 |
| சே கார்கவி | - | 12 |
| குபோதினி | - | 13 |
| அழ.இரஜினிகாந்தன் | - | 14 |
| சுஜாதா கண்ணன் | - | 14 |
| வளவன் கரிகாலன் | - | 15 |
| குடந்தை அனிதா | - | 16 |
| மகேஷ் சிபி | - | 16 |
| பிரபுசங்கர் க | - | 17 |
| புதுகை விஜய்ஆனந்த் | - | 18 |
| கூடல் தாரிக் | - | 18 |
| தங்கேஸ் | - | 19 |
| ரகுநாத் வ | - | 20 |
| ராஜிலா ரிஜ்வான் | - | 21 |
| சங்கரி சிவகணேசன் | - | 22 |
| சுமைல் ஹரீஸ் | - | 23 |
| மணிசங்கர் | - | 24 |
| வலங்கைமான் நூர்தீன் | - | 24 |
| வத்சலா ரமேஷ். | - | 24 |
| லெனின் | - | 25 |
| கி. சரஸ்வதி | - | 26 |
| ஜோதி சரண் | - | 27 |
| பரமேஸ்வரிசண்முகம் | - | 27 |
| மோகன் பாரதி | - | 28 |
| மகிழினி காயத்ரி | - | 29 |
| ரா.ராஜசேகர் | - | 30 |
| வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் | - | 31 |
| கோவை. நா.கி.பிரசாத் | - | 31 |
| நெல்சன் | - | 31 |
| யாழ்ராகவன் | - | 32 |
| கவி செல்வா | - | 33 |
| அஸீஸ் எம் பாயிஸ் | - | 34 |
| மு.முபாரக் | - | 35 |
| கதிரவன் வீ | - | 35 |
| அமுதா தமிழ்நாடன் | - | 36 |
| மெஹராஜ் பேகம் | - | 37 |
| செ.புனிதஜோதி | - | 37 |
| ரோஷான் ஏ.ஜிப்ரி | - | 38 |
| தா.ஜோ.ஜூலியஸ் | - | 39 |
| தங்கேஸ்வரன் | - | 39 |



**வி**ழிகளில் கருணையை நிரப்பி விட்டு
இதயத்தில் ஏன்
பிரளயத்தை நிகழ்த்துகிறாய் ?

வானளவு சுதந்திரத்தை
சிறகுகளில் வைத்திருக்கிறேன்.
உன் நிலத்தில் விழுவதற்காகவே
அவற்றை உதிர்த்து விட்டு வீழ்கிறேன்.

எனக்குள் இருந்து
சமிக்ஞைகளைத் தொடுத்துக் கொண்டே இரு.
உன்னைப் பின்பற்றுவதில் தானே
பிறவி முழுமை அடையும் !

ஊற்றுக்கண்ணில் சலசலக்கும் நீர்மம்
உனது அன்பு.
அதனால் தான்
வறண்ட உள்ளத்தைக் குடைந்து கொண்டே
இருக்கிறது காதல்.

காதல் யாகத்தில் தீ மூட்டுகிறாய்.
அதில் விழுந்து சாம்பலாகும்
சுள்ளி நான்.

எனக்குள்
முழுவதுமாக வியாபித்திருக்கிறாய்.
இனி என்னில் ஒதுங்க
எனக்கு இடம் ஏது ?

**தி.கலையரசி**



**யா**ர் பற்ற வைத்தது என்பதல்ல முக்கியம்
கண்முன்னேயே
கொளுந்துவிட்டு எரிகிறது நம் பிரியம்
அதிலிருந்து
வெடித்துச் சிதறுகின்றன சில சொற்கள்
நாசியைத் துளைக்கிறது
பச்சை ரத்தம் கருகும் வாசனை
பெரிய கட்டையைக் கொண்டு
யாரோ அடிக்கிறார்கள்
திமிறும் எலும்புகளை
பிரியத்தின் கடைசித்துளி
உருகவுமில்லை உறையவுமில்லை
பாறாங்கல்லைப் போல
ஒரே இடத்தில் கிடக்கிறது
மறுநாள் காலை
உனக்குத் தெரியாமல் நானும்
எனக்குத் தெரியாமல் நீயும்
சாம்பல் துணுக்குகளைப் பெற்றுச் செல்வோம்
யார் யார் காலையோ தழுவ
காலநதியில் கரைந்தோடும் நம் பிரியம்.
அத்தனை மழை
அத்தனை வெயில்
அத்தனை புயலிடமிருந்தும்
இதற்கா பொத்திப் பொத்தி வளர்த்தோம்?

மா. காளிதாஸ்



**தி**ருவிழாவுக்கு வரச்சொல்லி
ஒரு மாசத்துக்கு முன்பே
அழைப்பு வரும் அம்மாவிடமிருந்து
வழக்கமான வெள்ளி செவ்வாய்
பிரார்த்தனை அபிஷேகத்தில்
கூடுதல் வேண்டுதலாக
எங்களின் வரவையும்
இணைத்துக்கொள்ள்ளுவாள் அம்மா
கரையும் நாட்களில் உறுதி செய்யப்படாத பயண
நாளை
உறுதி செய்யச்சொல்லி
அம்மனுக்கு அழுத்தம் தருவாள்
என்னதான்
வானவேடிக்கை வண்ணவிளக்குகளென
ஊரே கலைகட்டினாலும்
அம்மாக்களுக்கு பிள்ளைகளை
வரவழைத்து பூரிப்படைவதில்தான்
முழுமையடைகிறது ஊர்திருவிழாக்கள்.

**க. அய்யப்பன்**

**க**றந்த பால்
மடி சேருகிறது
புட்டிப்பாலுக்காக குழந்தை...

**ஐ. தர்மசிங்**



முன்புபோல் இல்லை.
இப்போது வேகத்தை குறைத்துக் கொள்கிறேன்.
மூச்சிறைக்க ஓடி என்ன ஆகப்போகிறது.

நாற்பதுக்கு மேல் முறுக்குவது இல்லை வண்டியை.
சிக்னலில் பச்சை விளக்கிற்காக அமைதியாக
காத்திருக்கிறேன்.

இன்னும் சற்று நேரத்தில் உயிர் விடப்போகும்
ஸ்மார்ட்போன் என்னை
எந்தவிதத்திலும் பதட்டமடையச் செய்வதில்லை.

பருப்பு சாம்பாரில் சிதைந்து எழும் பச்சை மிளகாய்
வாசம் ஒரு நாளை அழகாக்க போதுமானதாய்
இருக்கிறது.

மிகக்கூரிய சொற்களைக் கூடப்
புன்னகையால் தழுவிக்கொள்ள முடிகிறது என்னால்.

யாரிடமும் எதையும் நிரூபிக்க
முயலாமல் கடந்து போகிறேன்.

எந்த சுணக்கமும் இல்லாமல்
சமையலுக்கு பூண்டு உரித்துக் கொடுக்கிறேன்.

ஈரத்துணி பக்கெட்டை மாடியில்
வைத்துவிட்டு கடைசி துணி காயவைக்கும்வரை
அம்மாவோடு காத்திருக்கிறேன்.

சொன்னால் நம்ப மாட்டீர்கள்...
முக்கியமாக..
'அம்மா பசிக்கிது சோறு போடு'
என்பதைத் தாண்டி அம்மாவிடம்
பேச நிறைய இருப்பதாக உணர்கிறேன்.

பேசுகிறேன்...
முன்புபோல் இல்லை நான்.

**நெல்சன் வாசுதேவன்**

# அன்பின் போதை



யாரோ ஒருவரின் அன்பின் நிழலில்
நமக்கொரு இடம் இருக்கிறது....
யாரோ ஒருவரின் பிரியத்தின்
நிலமதில் நமக்கொரு வாசம் இருக்கிறது....
யாரோ ஒருவரின் பெரும் மதிப்பீட்டின்
தராசுத் தட்டில்
நமக்கும் ஓரிடமிருக்கிறது...
யாரோ ஒருவர் நீட்டும் நேசக்கரத்தின்
வருடலில்...
நமக்கும் ஒரு தீண்டல் இருக்கிறது...
யாரோ ஒருவரின் நினைவேடுகளில்
நமக்கும் ஒரு பக்கம் இருக்கிறது...
யாரோ ஒருவரின் எழுத்துக்களில்
நமக்கும் ஒரு சொல் இருக்கிறது...
யாரோ ஒருவரின்  இதயக்கசிவில்
நமக்கும் ஒரு துளி இருக்கிறது...
யாரோ ஒருவரின் பார்வையில்
நமக்கும் ஒரு நனைதல் இருக்கிறது...
யாரோ ஒருவரின் கருணையில்
நமக்கும் ஒரு வரவு இருக்கிறது...

இப்படி யாரோ ஒருவர்
நமக்கு எல்லாமுமாக இருப்பதில்...
வெகு நிச்சயமாக நமக்கொரு
போதை இருக்கிறது.

ஆனால்...

யாரொருவருக்காகவும்
இப்படியானதொரு போதையை
நாம் தருவதில் தான்...
நமக்குச் சிக்கலே இருக்கிறது.

கொடுப்பதென்பது
வாங்கிக் கொள்வதைப் போல
அத்தனைச் சுலபமாயிருப்பதில்லை...
வாங்கியே சுகப்பட்ட ஒருவருக்கு.

**அன்பு மணிவேல்**



மனிதர்களுக்கு
ஒரு சன்னல்
என்னவாகவெல்லாம்
தெரியக்கூடும் ?

சிலருக்கு - அது
ஒரு துண்டு வானம் !

சிலருக்கு - அது
நிலவின் சிறை !

சிலருக்கு - அது
தென்றலின் அணை !

சிலருக்கு - அது
மழையின் முன்னால் காதலி !

சிலருக்கு - அது
பேய்களின் வாசல் !

சிலருக்கு - அது
நாய்களின் வாய் !

சிலருக்கு - அது
அமைதியின் ஊற்று !

சிலருக்கு - அது
கற்பனைச் சுருள் !

சிலருக்கு - அது
காதலின் வாசம் !

சிலருக்கு - அது
மரச்சட்டம் மட்டுமே !

சன்னலுக்கு
மனிதர்கள்
என்னவாக
தெரியக்கூடும்
தெரியுமா ?

எமனாக !
எமனாக மட்டும் !!
எமனாக மட்டுமே !!!

**வினோதன்**



யாரென்று தெரியாமலேயே
ஒரு சிறுமி
புத்தனை வரைந்துகொண்டிருந்தாள்.

ரசிப்பவர்களுக்கு
கொம்பு முளைத்திருக்கவேண்டும்.
அதிசயமாய்
ஞானம் முளைத்திருக்கிறது.

இது யாரென்றக் கேள்விக்கு
நான் வரைந்ததென்று
பதில் சொல்கிறாள்.
முளைத்தச் சிறகுகள்
ஒருமுறை சிலிர்த்துக்கொள்கிறது.

அருகிலிருந்த
மற்றொரு ஓவியத்தில்
விடுவிக்கப்படும் பறவையின்
சிறகசைப்பில் புத்தனின் பேச்சை
கோர்த்திருக்கிறாள் என்பது
அங்கிருந்த எந்த மேதைக்கும்
புலப்படவில்லை.

சிறிது தூரம்
பறந்து சென்றப் பறவை
திரும்பிப் பார்த்ததும் புன்னகைக்கிறாள்.
அது புத்தனின்
புன்னகைக்கான பதிலென்று
அந்தச் சிறுமி ஒருத்திக்கு மட்டுமே
தெரிந்திருந்தது...

கா.ரஹ்மத்துல்லாஹ்

# தொலைபுலத்தொடர்பு



**அ**மிலமென அள்ளித்தெளித்த
வார்த்தைகளுக்கு
விரிவுரைக் குறிப்புகள் எழுதிக் களைத்ததில்
மூடா விழிகள்

மௌன நொடிகள்
மன நரம்புகளைக் குத்திக் கிழிக்கத்
தொட்டாற் சுருக்கியாய் இல்லாமல்
நாய்க்குட்டியெனச் சுற்றும்
நினைவு

சண்டை; சண்டைக்கான சமாதானம்
சமாதானத்துக்கான சண்டை
வாக்குவாதம்
வாக்குவாதத்திற்கான வாக்குவாதமென
மாறிமாறித் தொடரும் போரைச்
சுகிக்கிறது கண்ணீர்

அசுரவதஞ்செய்து தேவர்களைக் காத்த
பெருந்தெய்வம்
சாராயத்துக்கு அருள்வாக்குச் சொன்ன
சிறு தெய்வம்
அநேகாந்தவாதம் போதிக்கும்
ஜைனம்
புத்தம் சரணம் கச்சாமி ஜெபிக்கும்
பௌதமென
அனைத்து கடவுள்களாலும்
கைவிடப்படுகிறது
ஈர்ப்பு விசை எதுவுமற்று வெளியில் திரியும்
மனது

உரிமைகோரப்படாத ஜந்துவாய் அலையும்
நம்பிக்கையிழந்த நொடிகளில்
எழுதத் தொடங்கினேன்
குறுஞ்செய்திகளை
காற்றில்

எல்லாம் நல்லதே நடக்குமெனச்
சொர்க்கத்திலிருந்து
பதிலளித்துக்கொண்டிருக்கிறது அப்பாவின்
நேச ஆன்மா.

பிரியா பாஸ்கரன்

# மனிதனைத்தேடி



**நா**ன்கு சுவர்களுக்கு
உள்ளே காணவில்லை
அதற்கு வெளிபுறமும் காணவில்லை
சாலையெங்கும் அரவமில்லை
பச்சைமரங்களின் கீழெல்லாம்
நிழல் படிந்த தடமில்லை
பெட்டிக்கடைகளில் தேநீர் அறுந்தவில்லை
எல்லைக்கல்லில் எடையேறவில்லை
எல்லாப்புறமும் காற்றைப்போல் அலைந்து திரிந்து
உலாவிக் கொண்டிருக்கிறேன்
ஐந்தறிவும்
மனிதம் எனும் பண்பும்
கொஞ்சம் இரக்கமும்
காரணமான கோவமும்
கொண்ட மனிதனைத்தேடி.....!

**சே கார்கவி**



இதற்குமேல் எனக்குள் ஒரு மனுசி காதலுடன்
இருப்பாள் என்பது
துரோகங்களினதும் வலிகளதும்
முதுகுச்சுமைகளுக்கு பிறகு நினைத்துப்பார்க்க
முடிந்திருக்கவில்லை...

என்றோ கையிலேந்தி தரத்தயங்கிய
ஒரு மலர்கொத்தை
பலவருடங்கள் கடந்தும் மறக்காமல் கொண்டுவந்து
தருவது போல என் முன் பேரன்போடு நீட்டினாய் ...

வரண்டுபோன மனித நேயங்களுக்குள்
உண்மையாய் அன்போடு இருப்பாதாலேயே
ஏமாற்றப்படுவது என்ற சாபத்துக்குப்பிறந்தவள்
தானே நான் என்று
வெறுமையடைந்து துவண்டு இருந்தேன்...

என் உணர்வுகள் எப்போதோ ஏமாற்றங்களினதும்
துரோகங்களினதும் அவமானங்களினதும் பிடியில்
தற்கொலை செய்துகொண்டது...

மறுபடியான ஒரு காதலில் எனக்கு எந்த நம்பிக்கயுமே
இல்லாத ஒரு பொழுதில்
அன்புவரட்சியின் ஒரு ஒற்றை பாதையின் முடிவில்
வற்றாத அமுதசுரபி போல் அன்பு பாத்திரத்தை
கொண்டுவந்து என்முன் வைத்து சந்தோஷித்தாய்....

எப்போதுமே நம்பிக்கைகளுக்கு கிடைத்த மாபெரும்
விலையான துரோகங்களின் பின்னும்
உன்மீதான நம்பிக்கைகளுக்கு எனக்கு
நேரங்கள்தேவையாக இருக்கவேயில்லை

சிறுகுழந்தை தாயின் மார்பில் அணைவது போல
ஒட்டிக்கொண்டாய்..

என் கைகளை இறுகப்பிடித்து நேசமென்பதை
உணர்த்திக்கொண்டே இருந்தாய்..

இதுவரை பேரன்பை கொடுக்கத்தெரிந்த எனக்கு
உன் அன்பை அனுபவிப்பதெல்லாம் வரமும்
வலியுமான புது அனுபவமாகத்தான் இருந்தது...

எதை தேடி என்னிடம் மண்டியிட்டாய்...?

அத்தனை உன்சக்திகளையும் எங்கோ தூக்கிப்போட்டு
குழந்தை போல என்முன் என் அன்புக்காய்
மண்டியிட்டுக்கொண்டபோதெல்லாம் உன்னை
அணைத்தெடுக்காமல் நான் என்னசெய்வது...?

எவ்வளவு வலி வந்தால் என்ன
அத்தனையும் மறந்துவிட நீயிருந்தாய்..

உன்வலிதுடைக்க நான் இல்லாது போவேனா..?
நானும் உனக்காகவே இருந்தேனே...

இறுகப்பற்றிய கைகளுக்கு ஆயுள் நீண்டே
இருக்குமென
பெருங்கனவோடு தானே உன் மார்பில்
உறங்கிப்போனேன்...

நீ மரணமொன்றை கையிலேந்தி
என்இறப்பை நிகழ்த்தி விடைபெற்றுக்கொண்டாய்..

நான் மறுபடி அதே வரண்ட ஒற்றைவழிப்பாதையில்
திரும்ப மனமற்று நடந்துகொண்டிருக்கிறேன்...

குபோதினி



அழுது முடித்ததும்
அடித்தவர்களிடமே
ஓடிப்போய்
அடைக்கலமாகிவிடும்
குழந்தைகளை விடவா
அகிம்சையை
புத்தனும் காந்தியும்
இயேசுவும்
போதித்துவிடப் -
போகிறார்கள்...?

**அழ.இரஜினிகாந்தன்**

கடவுள்ளென
கவிதை விரிகையில்
அகப்படும் வெளியில்
தொலைதல்
சாத்தியமாய்

**சுஜாதா கண்ணன்**



**சொ**ல்லிவிடாதீர்கள்
‘சும்மாதான இருக்கீங்க’
என்று
எவரையும்
எதற்காகவும்!

அது அவர்களின்
தன்மானத்தைச்
சுரண்டிப் பார்ப்பது
சொல்லமுடியாத
மரணவலியை
ஏற்படுத்திவிடக்கூடியது!

அந்த அர்த்தத்தில்
சொல்லவில்லை என்று
வேறு
எந்த அர்த்தத்தைச் சொல்லியும்
நீங்கள்
நியாயப்படுத்தவோ
சமாதானப்படுத்தவோ
முடியாத
பெருவலி அது!

வாய்க்காததினாலோ
வயதினாலோ
முடக்கப்பட்டிருந்தவர்களால்
இரண்டே வழிகளால்தான்
உங்களுக்குப்
பதில் சொல்லக்கூடும்...

சொல்வலிதாளாமல்
தமக்குள்ளேயே
உழன்று
துவண்டு
கொஞ்சங்கொஞ்சமாய்ச்
செத்துப்போவதொன்று!
சட்டென்று
..................
மற்றொன்று!

சொல்லிவிடாதீர்கள்
அப்படி
சட்டென்றவரையும்
எதற்காகவும்!

**வளவன் கரிகாலன்**



**நா**ன்கு சுவர் மட்டுமல்ல வீடு.
அன்று முப்பதே வயசான அக்கா
இன்று ஐம்பதை கடந்து
இந்த வயதிலும் எப்படி
தனியாக இருக்க முடிகிறது.
வடக்கு சுவரில் தெற்கு பார்த்து
நிழற் படத்தில் இருக்கும்
மாமாவிற்கு முப்பத்தைந்து
என்ற தைரியம் தானோ.

குடந்தை அனிதா

**பி**ன்னிருக்கையில் ஏறியமர்ந்து
என் தோள் பற்றுகிறாய்
சட்டென்று உருவாகும்
மின்சாரத் தீண்டல்கள்
எல்லாவிடத்திற்கும் பரவுகிறது
அறிவைத் தொலைக்கும்
இருசக்கர வாகனம்
பெட்ரோலில்
இயங்குகிறோம்
என்பதையே மறந்துவிடுகிறது

மகேஷ் சிபி



அப்பாவின் இருசக்கர வாகனத்தின்
முன்பக்கத்தில் "யார் அமர்வது??"
என்பதில் பப்புவுக்கும்
பட்டுக்குட்டிக்குமிடையே
தொடங்கும் சண்டை
தின்பண்டங்களை
பிரித்துக் கொள்வது!!
அம்மா பக்கத்தில்
யார் படுத்துக் கொள்வது!! என
அரைப்புள்ளிகள் வைத்து
தொடர்ந்து கொண்டே போகிறது
இப்படியே எதற்கெடுத்தாலும்
சண்டை போட்டுக் கொண்டிருந்தால்
பிற்காலத்தில் இவர்கள்
என்ன ஆவார்கள்??
யோசித்துக் கொண்டேயிருக்கையில்
கால் தடுக்கி கீழே விழுந்து
வீலென்று உரத்த குரலில்
அழும் பப்புவை பார்த்து
அவளையுமறியாமல்
கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கிறாள்
பட்டுக்குட்டி.....

பிரபுசங்கர் க



எங்கள் வானில் வண்ணம்
தீட்டும் வானவில்லிடம்
இது என்ன நிறம்..? அது என்ன
நிறம்..? என கேட்கிறார்கள்...

எனக்குள் ஒரு தாயை
செதுக்கியவளிடம்
ஸ்கொயர் எது..?
சர்க்கிள் எதுவென்கிறார்கள்...!

எங்கள் காதல் கடலில்
கிடைத்த முத்திடம்
ஆணி மணி சட்டத்தில்
முத்துக்கள்
கோர்க்கச் சொல்கிறார்கள்...

அரசு தொடக்கப்பள்ளியில்
நானெல்லாம்
மாணிக்கவாசகமய்யாவின்
முன்னிலையில்
தலையைச்சுற்றி காதைத் தொட
முயன்று கொண்டிருந்தேன்
என் நினைவடுக்குகளில்....!!

**புதுகை விஜய்ஆனந்த்**

மீன் சிக்கவில்லை
மீண்ட தூண்டிலில்
துளி நதி

**கூடல் தாரிக்**

# கடவுளை வரைவது



ஒரு தேவதையை வரைந்து கொண்டிருக்கும்
தூரிகையிலிருந்து
மெல்ல
சாத்தானின் முகம்
உயிர் பெற்று எழுகிறது

கனன்று கொண்டிருக்கும்
அதன் கண்களுக்குள்
பசி ஆற்றாமையால்
ஊளையிடும்
ஒரு தெரு நாய்
தோற்றம் கொள்கிறது

மரகதக்கோலிகளென உருளும்
அதன் கண்களுக்குள்
கிழிந்த உடைகளுடன் கையேந்தும்
பதின்ம வயது சிறுமி தோன்றுகிறாள்

பதின்ம வயதுசிறுமியின் கண்களுக்குள் அவளது
உடலை மொய்த்துப் போகும்
ஆயிரம் விழிகள் உருளுகின்றன

ஆயிரம் விழிகளுக்குள்ளும்
தோற்றம் கொண்டு
தோற்றம் கொண்டு : மறைந்து போகும்
கடவுளைப் பார்த்தபடி

சிறுமி இமைக்க மறந்து போய் இருக்கிறாள்

தங்கேஸ்

# முன்பெல்லாம்



**பா**ல்யத்தின் விழியகல
சந்தைக்குள் செல்கையில் ரேடியோவினை பிரித்து
மேய்ந்து கொண்டிருப்பார் குமார்

அதன்பிறகு தொலைக்காட்சிப்பெட்டிகள் கழற்றப்பட்டு
சுவரெங்கும் ஆணியில் தொங்கும்

டெக் ரிப்பேர்
வாட்ச் ரிப்பேர்
என மாறிக்கொண்டே
இருந்த கடை

மாற்றிக்கொண்டே
இருந்தது அதற்கான
மனிதர்களையும்

இப்பொழுதோ
சந்தை இருந்த
அதே இடத்தில் கட்டப்பட்டிருக்கிறது பிரம்மாண்டமான
மால்

ரிப்பேர் பார்த்த கடைகளெல்லாம்
தங்களின் பரிமாணத்தை அடைந்திருந்தன

எனக்குப் பிடித்த
ரேடியோ கடை
பிரகாசித்து கொண்டிருக்கிறது
புத்தம்புது கைப்பேசிகளோடு

குமார்தான் எங்குசென்றார்
பிழைப்பிற்கு என்ன செய்கிறார் என தெரியவே
இல்லை

பால்யம் தொலைந்த என் கைகளில் புது கைப்பேசி
இருக்கிறது

அதில் FM ரேடியோ இருப்பதாக விற்பவர் கூறுகிறார்.

ரகுநாத் வ



**த**ன் குட்டி பாவாடைக்குள்
துண்டைச் செருகி
சேலை போல் அணிந்து...
கையில் ஒரு ஹேண்ட் பேக்கையும்
எடுத்துக்கொண்டு
தயாராகிறாள் ஆஃபி ...

வரிசையாக
அடுக்கிய பொம்மைகள்..
ஒவ்வொன்றிற்கும்
ஒவ்வொரு பெயர் ...

பெயர் சொல்லிக் கூப்பிட்டு
அவளே 'பிரஷன்ட் மிஸ்'
என்கிறாள் .

மறக்காமல்
சில பெயர்களுக்கு
'ஆப்ஷன்ட் மிஸ்' என்கிறாள்..

சுவரில் சாக்பீஸ் வைத்து
ஏதோ கிறுக்கிவிட்டு
சத்தமாக 'ஏ' சொல்லிவிட்டு
மெதுவாகவும் ஒரு 'ஏ' சொல்கிறாள்..
இதை பொம்மைகள்
சொல்வதாகக் கருதுக..

கையில் உள்ள
ஸ்கேலை வைத்து
செல்லமாக ஒரு பொம்மையை தட்டி
'வாயைத் திறந்து 'ஏ' சொல்லு..' என்கிறாள்..

இடையில் பொம்மைகளைப்
படிக்கச் சொல்லிவிட்டு
டீ குடிப்பது போல் பாவனை
செய்தபடி
பக்கத்து மிஸ்ஸுடன்
அரட்டை அடிப்பது போல்
தானாகவே பேசிக் கொள்கிறாள்...

இவற்றையெல்லாம்
செய்யும் போது
ஆஃபி...
மறக்காமல்
தன் சேலைத் தலைப்பை
அவ்வப்போது தனது
வலது கையால்
சரி செய்து கொள்கிறாள்...

ராஜிலா ரிஜ்வான்



எந்த இடையூறுகளுமில்லாமல்
இந்த தனிமை
என் ஆன்மாவை
ஆள்கின்றது..

என்னைத்தேடி
நான் நானாகவே
எனக்குள் ஒரு பயணம்
செல்கின்றேன்..

அந்த பயணத்தின்
சாலை மருகெங்கும்
உன் விம்பங்கள்..
நான் நேசிக்கும்
தனிமைக்குள்
நீ நுழைந்தது எப்படி..?

எனைத் தேடி சென்ற போது
என்னுள் நீ வந்தது எப்படி..?
என் புதிய நானை
கண்டு கொடுத்தது நீதானே..

மெதுவாக மூழ்குகிறேன்....
என் உன்னுள்..
ஏதோ ஒன்றிடம்
தன்னை ஒப்படைத்த
சரணாகதியில்..
கடவுளின் இருப்பை
வேதங்களோடும்...
பேதங்களோடும்...
இனி விவாதிக்க போவதில்லை.

காதலின் தபோவனதுக்குள்
மானுடருள் இருக்கும்
ஒரு வெற்றிடத்தை
நிரப்பிக் கொள்ளும்
இந்தக் காதல் ஒரு நிரப்பி
அதுவே இறை.

**சங்கரி சிவகணேசன்**



மிக அதிகமாகப் பேசியிருப்பீர்கள்
மிக அதிகமாக எல்லோரையும் நம்பியிருப்பீர்கள்
மிக அதிகமாகச் சிரித்திருப்பீர்கள்

மிக அதிகமாக சுறுசுறுப்பாக இயங்கியிருப்பீர்கள்
மிக அதிகமாக வாழ்வென்று எதையோ
நினைத்து எதையோ வாழ்ந்திருப்பீர்கள்

மிக அதிகமாக இதுமட்டும்தான் இவ்வளவுதான்
உலகமென்று கொண்டாடியிருப்பீர்கள்

இப்போது அவையெல்லாம் வெறும்
மாயை மீண்டும் கிடைக்காத அழகிய
கனவென்று கொஞ்சம் அதிகமாகவே
உணர்ந்திருப்பீர்கள்

வாழ்க்கை வாழ்க்கையென்றால் என்னவென்று
உங்களுக்குப் பாடம்
எடுத்திருக்கும்

நீங்கள் புன்னகைத்ததை விட அதிகமாக
வருந்தியிருப்பீர்கள்
நீங்கள் நிம்மதியாக இருந்ததை விட
அதிகமாக உடைந்திருப்பீர்கள்

தனிமையை விரும்பிக் கொள்வீர்கள்
இன்பங்களை நினைத்து வலிகளை மீட்ட
நீங்களே உங்களுக்கு உந்துதலளிப்பீர்கள்

இரவின் தலையணைகள் நனைந்துபோயிருக்கும்
வாழ்வை நினைத்துப் பயம் வந்திருக்கும்

தவித்துப் போயிருப்பீர்கள்

ஒரு பெருமூச்சு விடுங்கள்
இப்போதுதான் நீங்கள் வாழ ஆரம்பித்திருக்கிறீர்கள்
இப்போதுதான் உங்கள் வாழ்வு ஆரம்பமாகிறது

இருட்டறையிலிருந்து மெல்ல வெளியே
வாருங்கள்
உங்கள் இருளைக் கிழிக்கும் வெளிச்சங்கள்
வெளியே கொட்டிக் கிடக்கிறது

வெளிச்சங்களைத் தேடிப்பயணமாகுங்கள்
நிம்மதிகள் பிறக்கும்
கூடவே புன்னகைகளும்..

**சுமைல் ஹரீஸ்**



**மீ**ன்பாடி வண்டியில்
எழுதவேயில்லை
சொர்கரதமென்று..

மணிசங்கர்

**கி**ளைகளை விரித்த மான்
அவ்வப்போது அமரும் பறவைகள்
துள்ளிக் குதித்தோடுகிறது வனம்.

வலங்கைமான் நூர்தீன்

**க**ரையும் காகம்
முட்டைக்குள் இசைக்கிறது
குயில் ராகம்.

வத்சலா ரமேஷ்.



**நீ**ண்ட வருடமாக
பூட்டப்பட்ட வீடுகளை எல்லாம்
பாழ்யடைந்த வீடு என்றோ
பேய் வீடு என்றோ சொல்லிவிடாதீர்கள்..

நீண்ட வருடமாக
பூட்டப்பட்ட வீடுகள் எல்லாம்
தனக்குள் ஒரு வலியை
பூட்டி வைத்திருக்கிறது
என்பது மட்டும் உண்மை...

ஆசையாய் வளர்த்த மகள்
பிடித்தவனுடன் சென்றதை
தாங்க முடியாத தந்தை
தூக்குமாட்டி கொண்டதின் காரணமாக
அந்த வீடு பூட்டியிருக்கலாம்...

தொழில் செய்ய அண்ணன்
வங்கியில் கடன் வாங்கி
அதை கட்ட முடியாமல்
வங்கி அந்த வீட்டை பூட்டியிருக்கலாம்..

அண்ணன் தம்பி
சொத்து பங்கீட்டு முறையில்
வீடு யாருக்கு என்று
நீதிமன்றத்தில் வழக்கு
தொடுத்ததின் காரணமாக
அந்த வீடு பூட்டியிருக்கலாம்...

மகன் வெளிநாட்டில்
குடியுரிமை பெற்றதால்
இங்கிருந்த பெற்றோரையும்
அழைத்து சென்றதால்
அந்த வீடு பூட்டியிருக்கலாம்...

இப்படி ஒவ்வொரு கதையும்
பூட்டி வைத்திருக்கிறது
பூட்டிய வீடுகள்...

அதனால் நீண்ட வருடமாக
பூட்டிய வீடுகளை
கடந்து செல்லும்போது
நீங்கள் ஒன்று மட்டும்
செய்தால் போதும்...

உங்கள் உதடுகளை
பூட்டி கொண்டால் போதும்...

**லெனின்**

# என்னவன்



ஒவ்வொரு முறை எனைப் பருகும் போதும்
சிறு புன்னகை உதிர்க்கிறாய்
மதிப்புக் கூட்டப்படுகிறது மிச்சப் பொழுதுகள்

என்னுடனான ஒரு மாலைக்கென
நீ கடக்கும் தொலைவுகள் அதிகம்
மலை முகடு சேர எந்நேரமும் பயணித்திருக்கும்
சூரியன் நீ

சூடும் சுவையுமான பகலின் வன்பொழுதுகளும்
குளிரும் இதமுமான அல்லின்
மென்னினைவுகளும்
நம் காதல் பயணங்களில் வளர்ந்து கொண்டே
இருக்கின்றன

உன் ஒரு முத்தம் உயிர்த்தெழவும்
மறு முத்தம் மடிந்து விடவும் செய்து விடுகிறது
ஆக்கவும் அழிக்கவும் இயன்ற காமன் நீ

என்றும் மகிழ்வாய் இருக்க என்னைப்
பணித்திருக்கிறாய்
உன்னுடனான பொழுதுகளுக்கென நான்
உயிர்த்திருக்கிறேன்

**கி. சரஸ்வதி**



**உ**ன் மீப்பெரு நேசத்தின்
முன் என் மீச்சிறு கோபங்கள்
சுழியமாகிவிடுகிறது

யாரும் பகுக்க முடியாத
பகா எண் என இருந்தேன்
என் கர்வம் உடைத்த காரணியாய் என்னுள்
நுழைகிறது உன் காதல்

ஒன்றுமில்லாத சுழியமென நினைத்து இருந்தேன்..
தலைகீழாக்கி முடிவீலியொன
என் பிரமாண்டம் எனக்கே உணர்த்துகிறது உன் காதல்

காதல் எனும் மீச்சிறு பொது மடங்கில் முரண் களைந்து
அடைக்கலமாகிறோம்.

பேரன்பு எனும் முடிவீலியை
மீச்சிறு காரணியான
ஊடல்கள் உடைக்க முடியாது
தோற்று ஓடுகின்றன

**ஜோதி சரண்**

**ச**ட்டென்று
நீட்டியது
பாவக்கணக்கு
எழுதிய விதி...
சற்றும்
யோசிக்காமல்
கருணை
மனுதாக்கல்
செய்தது மனம்...
பாவமும்
புண்ணியமும்
மறுபரிசீலனையில்
இருக்கிறதென
நகைத்து
சிரிக்கிறது காலம்...
மறுப்பேதும்
சொல்லத்தோணாத
கடவுள்
புன்னகைத்தார்....
புரியாத வாழ்க்கை
புதிராகவே கழிகிறது!

**பரமேஸ்வரிசண்முகம்**

# துரோகத்தின் முத்தம்



முத்தங்கள் தீர்ந்துவிட்ட
ஒரு காலத்தில்
வாழ்கிறோம்
நீயும் நானும்

திரையரங்கக் கழிவறைகளில்
பெரிய உதடுகளை
வரைந்திருப்பவனின்
முத்தம் குறித்த கற்பனை
அதிர்ச்சியூட்டுகிறது

வீடு அலுவலகம் என
எங்கெங்கு காணினும்
பிளாஸ்டிக் பூக்கள் வந்தபோது
பிளாஸ்டிக் முத்தங்களும்
வந்துவிட்டன

ஒரு வாகனம் மீது
மற்றொரு வாகனம்
மோதும்போது
எனக்கு சத்தம்தான்
ஞாபகத்திற்கு வருகிறது
உனக்கு மட்டும் முத்தம்
ஞாபகத்திற்கு வருகிறதா

உச்சந்தலையில்
முத்தமிட்ட நானும்
உன்மத்தப் பொழுதில்
கண்களை மூடிய நீயும்
கடவுளைப் பார்த்தபின்பும்
காதலைக் கைவிட்டவர்கள்

ஒரு குழந்தையின்
முத்தத்தை மட்டுமே
இன்னும் நம்புகிறேன்
பற்றுக் கோடின்றி
மனக் கொடி
வாழுமா சொல்

மற்றபடி
அன்பின் நிமித்தமாக மட்டுமல்ல
துரோகத்தின் நிமித்தமாகவும்
கொடுக்கப்படலாம்
முத்தங்கள்

நீங்கள் மனிதனெனில்
உங்களுக்குக்
கிடைக்கப் போவது
அன்பின் முத்தம்

நீங்கள் கடவுளெனில்
உங்களுக்குக்
கிடைக்கப் போவது
துரோகத்தின் முத்தம்

**மோகன் பாரதி**



சருகுகள்
உதிர்ந்த
வனத்தில்தான்
பறவைகள்
பாடித் திரிந்தன

மலைகளுக்கப்பால்
எப்போதும் ஒரு கதை
இருந்து கொண்டே
இருக்கிறது
கதை கேட்கும்
குழந்தைக்கு

கிளைகளின்
பாடல்களில்
கண்ணயர்வதேயில்லை
மரம்

நதியின்
கூழாங்கல்லில்
பளபளக்கிறது
காலம்

இழப்பின்
எச்சத்தில்
தொடங்குகிறது
மீண்டும் ஒரு வாழ்வு
விதை

தீயின்
நாக்குகளில்
பெரும் பசி
அமைதியாய்த்
தன்னைத் தின்னக் கொடுத்தது
வனம்
இன்னொரு வனம்
மண்ணில்
விதைத்த நம்பிக்கையில்

மகிழினி காயத்ரி

# மணலின் மவுன அமர்வு



**எ**திர் நிரம்பிய கடல்
தெரிவதில்லை துளியாகவும்

மணற்புரம் மீதமர்ந்த
புட்டத்தின் அழுத்தமூறிய நிமிடங்களில்

நிசப்தம் உண்டிருந்தன
காற்று அலை புறம்
சத்தங்கள் யாவும்

யாதொரு யோசனைத் துளியுமில்லை
மூளையின் மடிப்புகளிலும்
மனமுடிச்சுகளிலும்

காலடித்தடங்கள்கூட இல்லை
நினைவுகளின் தாழ்வாரத்திலும்

சடச்சடவென அடித்த
தீடீர் மழையில்

ஓடியொதுங்க முயல்கையில்
உதிர்ந்தன
இத்தனையாண்டுகளின்
ஏதேதோ நினைவுகள்
மணலொட்டிய இடங்களில் இருந்து
மணலைவிட
அதிக நெரிசலும் நொறுங்கலுமாக

பேசிக்கொண்டே இருக்கவேண்டும்
இந்த உதிர்தலுக்காகவே
மணல்மீதான மவுன அமர்வு குறித்து

ரா.ராஜசேகர்



**கா**லண்டரின் காகிதங்கள்
குறைந்துபோன கடைசி மாதமென
நமக்கிடைப்பட்ட உரையாடல்
குறைந்துபோயிருப்பதாய்
சுட்டிக்காட்டுகிறாய்
உண்மை தான்
இப்போது தான்
இன்னொன்றையும் கவனிக்கிறேன்
முன்பெல்லாம்
கண்ணில் பட்டதில்லை
துருத்தி நிற்கும் ஆணிகள்...

**வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்**

**யா**னை இறந்த இரவு
நிற்காத பிளிறல் சப்தம்
பாகனிடம்!

**கோவை. நா.கி.பிரசாத்**

**தி**ருநீறு வைத்துவிட்டு
ஊதும் நண்பனின் அம்மா.
கலையாமல் இருக்கட்டுமே
கடவுள் நம்பிக்கை.

**நெல்சன்**



எப்போதும் வெறுங்கழுத்தோடு இருக்கும்
நாச்சியாள்புரம் அத்தைக்கு நகுலனைத் தெரியாது

பின் நவீனத்துவ
புரிதலின்றியே
லாவகமாக புரோட்டா வீசும்
ஜென் துறவி காசியண்ணன்

சைடுஸ்டாண்டு ..என கதறும்
பெயர் தெரியாத முகமறியாத
நடுவெட்டு வண்ணதாசனை
வாசித்திருக்க வாய்ப்பில்லை

தராசு இல்லாமல் கை நிறைய
கத்தரிக்காய்அள்ளிப்போடும்
சீனியம்மாள் கிழவிக்கு
பஷிரும் பொன்னீலனும்
எவ்வித பரிச்சயம்

ஈவிரக்கமற்ற மொழியில்
உச்சஸ்தாயி ஒலியில்
குரைக்கும் அவருக்கு
ஜெ மோவோ ஜெ.கேவோ
அறிமுக மாகியிருக்கவில்லை.

நந்திதேவர் ஆலயத்தில்
திருவோடு ஏந்திய
ஜாடாமுனிக்கு
உபநிடதம் உள் நுழைய வழியில்லை..
ஆனாலும்
எனது காபி குவளை
எப்போதும் காலியாகவே இருக்கிறது..

**யாழ்ராகவன்**



உனக்கும் எனக்குமான
இந்த உறவை
ஒரு நாவலாக எழுதிக் கொண்டிருக்கிறேன்

இந்த நாவலில்
உன்னை கடைசி
அத்தியாயம் வரை
அழைத்துச்செல்ல நினைக்கிறேன்

நீ எந்த வேகத்தடையில்
நிற்கப்போகிறாய் என்று
எனக்குத் தெரியாது

கதையில் உன்னை
கடைசிவரை நல்லவனாகவே
காட்டப்போகிறேனா என்பதும்
எனக்குத் தெரியாது

ஆனால் உன்னை
அணு அணுவாய்
சித்திரவதை செய்வது போல்
அத்தியாயம் இருக்கும்

உன்னை காப்பாற்றிக் கொள்ள
இரவு பகலாய் ஓட விடுவேன்
தூக்கமில்லாமல் தவிக்க விடுவேன்

கவலைப்படாதே
நாவலின் முடிவில்
உன்னை உயிரோடு விட்டு விடுகிறேன் .

**கவி செல்வா**

## சிலுவையில் அறையப்பட்ட பிசாசு



ஆஸ்பத்திரி முன்றலில்
கைக்குழந்தையுடன் நீ
அடிமையாய் விலைபோய்
என் எஜமானியின்
காருக்கு சாரதியாய்
வந்திறங்கும் நான்.

“நீ சொல்லியிருக்கலாமே”
என்ற, எனதும் உனதுமான
ஏக்கங்களை மிதித்து
யாரோ நடந்திருக்கிறார்கள்.

சுயநினைவுடன்
விலைபோன அடிமை நான்
விடுதலையை தொலைத்து
நிற்கிறேன்.

கண்ணியமும்
ஏக்கமும் கலந்த உன் பார்வையில் வெட்கித்
தலைகுனிகிறேன்.

சீதனச் சிலுவையில்
அறையப்பட்ட பிசாசு நான்
என்னை ஏசுவாக நினையாதே.

வலது கையில்
வயற்காணியும்
இடது கையில் தென்னந்தோப்புகளும்
அறையப்பட்டன.

வலது கால் ஹைபிரிட்டுக் காரிலும்
இடது கால் வங்கிக் கணக்கு மிகுதியிலுமாக
அறையப்பட்டன.

அறையப்பட்ட பாரம் மட்டும்தான்
சுமக்க முடிகிறதிங்கு
அனுபவிக்க அணுவுமில்லை.

அதிகாரமிழந்து
பிரஜா உரிமை பறிக்கப்பட்டு
பேரம்பேசலில் பெயர் கெட்டு
அவமானங்களை தினம் தினம்
சுமந்து இருட்டறைக்குள்
விலங்கிடப்பட்ட. இருள் ஆனேன்.

முதிர்கன்னிகளின்
ஏக்கம் தரித்த கண்ணீர்த்துளிகள்
இப்போதென்னைச் சுடுகிறது.

**அஸீஸ் எம் பாயிஸ்**



**ந**னையாமலிருக்க
ஓடிக்கொண்டிருக்கிறது
ஒரு கூட்டம்,
குடைக்குள் ஒளிந்து கொள்கிறது
மறு கூட்டம்,
வீட்டை விட்டு வெளியே
வர மறுக்கிறது
இன்னொருகூட்டம்,
வானம் நோக்கி
கைகளை விரித்த படி
துள்ளிக் குதித்து
விளையாடத் தொடங்குகிறார்கள்
சிறுமியர்,
இப்போது தொடங்குகிறது...
மழை
தன் விளையாட்டை!

மு.முபாரக்

**பு**ள்ளி வைத்து
அதனை சிறையிலடைக்கிறாய்
அது கோலமாகிவிடுகிறது

கதிரவன் வீ

# பெரும்பயணம் நான்



**மு**ட்டிமோதி
மண் பிளந்து
வான் பார்க்கும்
துளிர் செடியின்
திமிர் கொண்டவள்
நான்.

வான் கிழித்து
தரை மோதி
நதியோடி
கடல்கலக்கும்
பெருமழையின்
குளுமை
நான்.

சிறு கிளை அமர்ந்து
பெருங்கிளை
அசைத்து
பிரபஞ்சம்
குளிர்விக்கும்
மென்காற்று
நான்.

முகில் ஒதுக்கி
வனம் பார்த்து
மலரழகில்
மனம் லயிக்கும்
விண்மீனின்
ஒளிச்சிதறல்
நான்.....

எனக்கு
ஒவ்வாத காலத்தை
முறம் கொண்டு
அடித்துத் துரத்தும்
ஆதிதமிழச்சியும்
நானே....

காலம் நடந்த பாதையை
என் காலடிக்குத்
திருப்பும்
பெண்ணியத்தின்
பெரும்பயணம் நான்......

அமுதா தமிழ்நாடன்



**பு**யல் காற்று
மழை இடி
மின்னல்
வானிலை அறிக்கை...
என்றபடி...
தன் திருத்தலத்தினை
மறந்து போன
ஊர் மக்களிடம்
சாமியாடியின்
மூலம் குறி சொல்லி
திருவிழா கேட்கும்
அம்மனைப் போல்
கவன ஈர்ப்பு
கேட்கின்றது
#வானம்...

**மெஹராஜ் பேகம்**

**அ**வளின் உரையாடல்கள்
நெடுநாட்களாய்
அவனின் இதயத்தில்
புயலின் அறிகுறிகளை
நிகழ்த்திக்கொண்டிருந்தன.

இன்று எதிர்பாராத நேரத்தில்
அவனையும் மீறி
இதழ்களின் வழியே
அப்புயல் கடந்தது.

**செ.புனிதஜோதி**

# செய்வினை



**ஒ**ருத்தனின் செய்வினை
இங்கு எத்தனை பேருக்கு சூனியமாகி விட்டது.....?
இது கர்மம் இல்லை கருமம்
பேய்க்கு உருவேற்றியவனும்
பிச்சைப் பாத்திரமாய்
ஒரு பக்கம்
பனியும் பணிய வைக்கிறது
மறுபக்கம்
காற்று மூச்சிறைக்க வீசி
உயிரை வாங்குகிறது
மாடு என்றவனை முட்டித்தள்ளுகிறது காலம்
முள்ளை அளந்தவன்
எலும்பும் தோலுமாய்.....,
கோழி வளர்த்தவன்
குரங்கு வித்தை
காட்டுகிறான்
சமுத்திரத்தின் நடுவில்
தண்ணீர் பஞ்சம்
உண்டு என்பது இல்லை
இல்லை என்பது இருக்கிறது
எங்கிருந்து தொடங்குவது
என்ற இடத்தில் இருப்பு
எங்குபோய் முடியும் என்ற இடத்தில் பொறுப்பு
எந்த முகத்திலும்
இருக்க இடமில்லாமல் சிரிப்பு
இனி அடிக்கடி நிகழும் இறப்பு!

**ரோஷான் ஏ.ஜிப்ரி**

## ஊளை



அடுத்து அடுத்து இரண்டு
மரணங்களை சந்தித்த அந்த
எதிர் வீட்டு வாசலில் அதிகாலையில்
நாய் ஒன்று விடாமல் ஊளையிட்டது.

அதைக் காணச் சகியாமல்
போ,போவென துரத்தி விட்டு
நல்லது செய்தோம் என்ற நினைப்பில்
வீடு திரும்பி நடந்தார் அவர்.

சத்தமில்லாமல் அவர் பின் வந்து
அவரைக் கடித்து விட்டு ஓடியது
அந்த நாய் வடிவில் வந்த எமன்.

மூன்று நாள் கழித்து எல்லாம்
முடிந்தபோது அவரது மனைவியிடம்
பக்கத்து வீட்டுக்காரர் சொன்னார்
அந்த நாய் நேராக உங்கள்
வீட்டைப் பார்த்துதான் ஊளையிட்டது.

**தா.ஜோ.ஜூலியஸ்**

முன்யாமப் பொழுதில் கசியும் பனியும்
விசும்பும் மேகங்களும்
இந்த வீணையை மீட்டி
கொஞ்சம் அதிரவைக்கின்றன

மரவட்டையாக சுருண்டு கிடக்கும் காலம்
பதறி எழுந்து அறையை விட்டு
ஊர்ந்து செல்கிறது

சின்னஞ் சிறு மூங்கில் குச்சியால்
அதன் முதுகை கீறிக்கீறி
காயப்படுத்தியது போதும்

நம் பொருட்டு யாதும் எவரும்
காயப்படாமலிருக்க
இந்த இரவை எடுத்து நீ விழுங்கி விடு

நான் காத்திருக்கும்
சுவர்பல்லியின் முன்பு
சின்னஞ்சிறு பூச்சியாக நகர்கிறேன்

**தங்கேஸ்வரன்**


RN BALAJI PRODUCTION
FILMING IN PROGRESS...
PADAIPPU PRODUCTION
AISHWARYA DUTTA - SENDRAYAN
PRODUCTION NO:01
DIRECTED BY CHARLES RAYAPPAN
DOP - MARUTHA NAYAGAM BOSE - MUSIC - DEV PRAKASH
EDITING -TAMILARASAN - CHOREOGRAPHER - ABU&CHALAS - PRO - NIKIL MURUGAN
CO PRODUCERS - MOHAMED ALI JINNA.M - SASIKUMAR NITHYANANTHAM
PRODUCED BY-BALAJI NEDUNCHEZHIYAN